மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Nature and Music in Sangam Literature

Dr. M. Shyamala

Assistant Professor, Department of Tamil, Gurunanak College, Chennai, India

Manuscript ID : **MT218A0120**

Volume : **3**

Issue : **1**

Month : **March**

Year : **2023**

Received: 03.02.2023
Revised: 10.02.2023
Accepted: 16.03.2023
Published: 20.03.2023

Pages : 93-101

DOI: 10.5281/zenodo.7748040

ABSTRACT:

If God is the creator of nature, then nature is the creator of music. It is no exaggeration to say that the motherland of music is as natural as the motherland package to the breeze. If there is one language that people and people have in common, it is music. Mags can be said to be pioneers, rather than people, in sharing emotion through sound. Man, who first began to worship nature, first learned the benevolent music of that nature as his first language. Its expression is that poets have sung extensively about nature and music in Sangam literature.

KEYWORDS:

Nature, Music, Language, Sound, Sangam Literature

சங்க இலக்கியத்தில் இயற்கையும் இசையும்

முனைவர். ம. சியாமளா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, குருநானக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

இயற்கையைத் தோற்றுவித்தவன் இறைவன் என்றால் இசையைத் தோற்றுவித்தது இயற்கை எனலாம். தென்றலுக்குத் தாய்வீடு பொதிகை என்பதுபோல் இசைக்குத் தாய்வீடு இயற்கை என்றால் அது மிகையாகாது. மக்களுக்கும் மாக்களுக்கும் பொதுவான ஒரு மொழி உண்டு என்றால் அது இசைதான். ஒலியின் மூலம் உணர்வினை பகிர்து கொள்வதில் மக்களைவிட, மாக்கள் முன்னோடிகள் எனலாம். முதலில் இயற்கையை வணங்கத் தொடங்கிய மனிதன், அந்த இயற்கையின் நற்கொடையான இசையை முதல் மொழியாக கற்றான். அதன் வெளிப்பாடுதான் சங்க இலக்கியங்களில் இயற்கையைப் பற்றியும், இசையைப் பற்றியும் புலவர்கள் அதிகமாகப் பாடியுள்ளனர்.

கருச்சொற்கள்

இயற்கை, இசை, மொழி, ஒலி, சங்க இலக்கியம்

முன்னுரை

கற்கால மனிதன் கல்லையும், மண்ணையும்தான் கண்டறிந்தான். அவன் தன் மனதில் உள்ளக் கருத்தினை வெளிப்படுத்தப் பல வகை ஒலிகளை உருவாக்கினான். காலப்போக்கில் அதுவே அவன் பேசும் மொழியாக மாறிவிட்டது. கற்கால மனிதன் முதன் முதலில் பேசியது ஒலிகள் மூலமே. ஒலி தான் அவன் தாய்மொழி. பின்பு விலங்குகளை வேட்டையாடவும், சின்னஞ்சிறு பறவைகளை ஓட்டவும் ஒலிகளைப் பயன்படுத்தினான். இவ்வாறாகச் சங்க கால இலக்கிய மாந்தர்கள் ஒலியின் மூலம் தான் இசை பிறந்தது என்பர். அவ்வகையில் சங்க இலக்கியப் பாடல்களில் இயற்கையான இசைகள் எவ்விதம் வெளிப்படுகிறது என்பதனை இக்கட்டுரையில் காண்போம்.

இயற்கையும் இசையும்

சங்க கால மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். அவர்கள் இசை நுட்பம் பற்றிக் கூற விரும்புவது இயற்கையையும் இசையையும் தான். இயற்கையும் இசை ஒலிகளும் ஒன்றிணைந்து வருவதனை,

ஆடு அமைக் குயின்ற அவிர் துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆக
பாடுஇன் அருவிப் பனி நீர் இன் இசை
……… ……… ……… ………
நனவுப் புகு விறலியின் தோன்றும் நாடன் **அகம்.** 82:1-10

மூங்கிலில் வண்டுகளால் துளைக்கப் பெற்றுள்ளத் துளைகளின் மேல் காற்றுப் புகுந்து வரும்போது ஏற்படும் ஒலி குழலோலியாகவும் தோற்றம் பெற்ற இனிய அருவியின் குளிர்ந்த நீரின் இனிய ஓசைக் கூட்டமான மத்தளங்களின் செறிந்த இசையாகவும் கூட்டமானக் கலைமான்களின் தாழ ஒலிக்கும் கடியக் குரல் பெருவாக்கியத்தின் இசையாகவும் அதனுடன் மலைச்சாரலில் உள்ள மலர்களின் இடையே உள்ள வண்டின் ஒலி இனிய யாழிசையாகவும் விளங்கியது. இத்தனை சிறப்புகளையும் உடைய மலைநாட்டுக்குத் தலைவன் என்றுத் தலைவனுடைய நாட்டுவளம் குறிக்கப்படுகின்றது. இயற்கை ஒலியைப் பற்றி பரிபாடல்,

ஒரு திறம் பாணர் யாழின் தீங்குரல் எழ
ஒரு திறம் யாணர் வண்டின் இமிர் இசை எழ
……… ……… ……… ……… ………
ஒரு திறம் ஆடு சீர் மஞ்ஞை அரிக்குரல் தோன்ற **பரி.** 17:9-19

பகைவர்களான அவுணர்களை வென்ற முருகப் பெருமானின் திருப்பரங்குன்றத்தில் ஒரு பக்கத்தில் பாணரின் யாழின் இனிமையான இசை ஒலி எழும். மற்றொரு பக்கத்தில் பூக்களாகிய வருவாயை உடைய வண்டுகள் ஒலிப்பதால் உண்டான இசை ஒலியும் எழும். வேறொரு பக்கம் கணுக்களையுடைய வேயக்குழலின் ஓசையும் எழும். மற்றொரு பக்கம் வண்டுகள் பண்களைப் போல் பரவும் இசையையும் எழுப்பும்.

ஒரு பக்கம் மண் பூசப்பட்ட முழவினது முழக்கம் உண்டாகும். மற்றொரு பக்கம் தலைமைத் தன்மையுடைய விழும் அருவி நீரின் ஆரவாரம் கேட்கும். ஒரு பக்கம் பாடலில் சிறந்த ஆடல் மகளிர் அசைந்து ஆடுவர். ஒரு பக்கம் பாண் மகள் பாடும் பாலைப் பண்ணான அழகிய மிடற்றுப் பாடலின் நெடியக் கிளர்ச்சியுடையக் கிழமை நிறை குறை விளங்கும். மற்றொரு பக்கம் தாளத்திற்குப் பொருத்தமாக மயில் ஆடும் குரல் ஓசையும் எழும். ஒன்றிற்கு ஒன்று ஒப்புமையுடைய இசை ஒலிகள் திருப்பரங்குன்றத்தில் எழும் என்றுக் கூறப்பட்டுள்ளது.

அருவி விழும் இசை

சங்க இலக்கியப் பாடல்களில் பல இடங்களில் அருவி விழும் ஓசை இசையோடும் இசைக் கருவியோடும் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

தலைவன் பல காடுகளைத் தாண்டிப் பொருளீட்டச் சென்றுள்ளான். அக்காடுகளில் கொட்டும் அருவியானது திதியன் என்னும் குறுநில மன்னனின் வெற்றி முரசினை போல் ஒலித்தச் செய்தியை,

பொதியிற் செல்வன் பொலந் தேர்த் திதியன்
இன்இசை இயத்தின் கறங்கும்
கல்மிசை அருவிய காடு இறந்தோரே **அகம்.** 24:20-22

எனும் அகநானூறு அடிகள் சுட்டிக்காட்டுகின்றன. நற்றிணையில்,

பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன் இயத்து ஆடும் நாடன் **நற்.** 34:4-5

இறை வழிபாட்டிற்கு வந்த அச்சூரரமகள் மலையில் பொழியும் அருவியில் ஒலிக்கு ஏற்ப இசைக்கருவிகளையும் சேர்த்து இசைத்து ஆடி மகிழ்ந்துள்ளனர் என்று நற்றிணைப் பாடல் கூறுகின்றது. குறுந்தொகையில்,

பெருவரை மிசையது நெடுவெள் அருவி
முதுவாய்க் கோடியர் முழவன் ததும்பிச்
சிலம்பின் இழிதரும் இலங்குமலை வெற்ப **குறுந்.** 78:1-3

பெரிய மலையில் நீண்ட வெண்மையாக விழுகின்ற அருவி, அறிவு முதிர்ந்தக் கூத்தர்களின் மத்தளத்தைப் போல ஓசையிட்டுப் பக்க மலையிலிருந்துப் பெருகிக் கீழே விழுங்கின்றது எனக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது. அருவிகளின் இசை இன்னிசையாகச் சங்க இலக்கியத்தில் கருதப்பட்டுள்ளது.

ஊர்களில் நிகழும் இசை

சங்க இலக்கியத்தில் ஊர் என்பதுச் சிறப்பிற்குரிய ஒரு இடமாகக் குறிக்கப்படுகின்றது. ஊரின் செல்வ வளமும் ஊரில் நிகழும் திருவிழாக்களும் அன்றாட நிகழ்வுகளும் என மனித வாழ்க்கை நிலை ஊரின் வழி புலப்படுத்தப்படுகின்றப் பாங்கினைக் காணமுடிகின்றது.

இசைத்தலையே தொழிலாகக் கொண்ட இசைக்கலைஞர்கள் கூட அறிந்திராதப் பல இசைக்கருவிகளின் இசை எழுகின்ற மிகப் பழமை வாய்ந்த ஊர் என்பதை,

இயவரும் அறியப் பல்லியம் கறங்க
அன்னோ பெரும் பேதுற்றன்று இவ்வருங்கடி மூதூர் **புறம்.** 336:6-7

எனும் புறநானூற்று அடிகள் சுட்டுகின்றன.

ஊரில் உள்ள பல்பொருள் அங்காடியில் இசைக்கருவி முழங்கும் என்பதைக்

கயம் குடைந்தன்ன இன்தொட்டு இமிழ் இசை **மதுரை.** 363

எனும் மதுரைக்காஞ்சி அடி குறிப்பிடுகிறது.

அகன்ற ஊரில் விழாக் கொண்டாடுகின்றக் காலத்தில் மிகுதியாக அரித்தெழும் ஓசை கூட்டுகின்ற இனிய இசைக் கருவிகள் ஒலிக்கின்ற நிகழ்வினைச்

சாறு கொள் ஆங்கண் விழவுக் களம் நந்தி
அரிக் கூட்டு இன்இயம் கறங்க ஆடு மகள் **குறிஞ்சி.** 192-193

எனும் இவ்வடிகள் சுட்டி நிற்கின்றன.

ஊரில் ஒலிக்கும் இசைக்கருவிகளின் முழக்கம் கேட்காதவாறு தயிரைக் கடையும் மத்தின் ஒலி மிகுந்து கேட்கும் செல்வச் செழிப்பு மிக்க ஆய்ச்சியர் மனைகள் என்பதைக் குறிக்கும் பாடலடி,

மத்து உரறிய இன்இயம் இழிழா **பதிற்று.** 26:3

எனும் பதிற்றுப்பத்துப் பாடல் கூறுகின்றது.

திருச்சீரலைவாய் என்னும் கடல் முழங்கும் திருச்செந்தூர் முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்று. அவ்வூரில் தேவதுந்துபி எனும் கொம்பு முழங்கவும் வெண்மையானச் சங்கின் முழக்கம் எழவும். இடி போன்ற ஓசையையுடைய முரசின் இசை முழக்கமாகவும் பல்லியக் கருவிகளின் இன்னிசை முழக்கமும் ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதை,

அந்தரப் பல்இயம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரல் தலைக் கொண்ட உரும் இடி முரசமொடு **திருமுரு.** 119-121

எனும் அடிகள் இயம்புகின்றன.

மலைநாடுகள் வளப்பமானவை. அவ்விடத்தில் கொம்புகள் பலவும் முற்றியப் பூவாது காய்க்கும் ஆல மரத்தில் பறவைகள் கூடுகட்டிக் கொண்டு வாழும்,

அப்பறவைகளின் ஒலி இசைக்கருவிகள் பலவற்றைக் கூட்டாக ஒலிப்பதுப் போன்று மிகப் பெரியதாகும். அத்தகைய வளம் பொருந்திய ஊர்களை உடையது என்பதை,

அகன்கண் பாறைத் துவன்றிக் கல்லென
இயங்கல் ஓம்பிநும் இயங்கள் தொடுமின் **மலை.** 276-277

மலைபடுகடாம் அடி உரைக்கின்றது.

தலைவி திருமணமாகிச் சென்றபின் அவள் பிரிவால் வாடும் செவிலி என்னைவிடக் கள்ளின் களிப்பினால் பாணர்கள் ஒன்றுக் கூடி ஒலிக்கும் இசைக்கருவிகள் தேர் ஓடும் இத்தெருக்களில் இடைவிடாது ஒலித்துக் கொண்டே இருக்கும். இவ்வூர் தன் விருப்பத்திற்குரிய ஒரு பொருளை இழந்து விட்டது எனும் கூற்றாக,

நன்ன ரானர் கூடுகொள் இன்இயம்
தேர் ஊர் தெருவில் ததும்பும்
ஊர் இழந்தன்று தன் வீழவு உறு பொருளே **அகம்.** 139-13-15

என்று அகநானூறு ஊர் என்பது அங்கு நடக்கும் நிகழ்வுகளால் சிறப்பிக்கப்பட்டதும் நிகழ்வுகளால் ஊர்ப் பெருமை பெற்றதும் இங்கு உணரமுடிகின்றது.

ஏறுதழுவுதல் நிகழ்த்தும்போது ஏற்படும் இசை

ஏறு தழுவுதலாகிய வீர விளையாட்டுக்கள் வாழ்க்கையின் நிலையையே மாற்றக் கூடியதாகவும் எதிர்காலத்தைத் திட்டமிடக் கூடியதாகவும் இருக்கின்றது. சங்க காலத்தில் பயன்பாட்டிலிருந்த இன்றியமையாத நிலையினைப் பெற்றிருந்த வீரவிளையாட்டுகளில் ஒன்று ஏறுதழுவுதல் ஆகும்.

தலைவியின் மனத்தில் தம்மைப் பற்றி உயர்வான எண்ணத்தை வளர்ப்பதற்கும் தலைவியைத் திருமணம் செய்துக் கொள்வதற்கும் தலைவனின் திறமையைச் சோதிக்கும் விதமாக முல்லை நிலத்து மக்களிடையே வழக்கிலிருந்த மரபு வழியான நிகழ்வாக ஏறுதழுவுதல் அமைந்திருந்தது.

ஏறுதழுவுதல் நிகழ்த்தும் போது நிகழ்த்துபவரை வேகப்படுத்தவும் அவருக்கு ஊக்கமளிக்கவும் வேண்டி கடுமையான ஓசையையுடையப் பல இசைக்கருவிகளை முழக்குவர். அவ்வோசை இடி முழக்கத்தைப் போன்றுப் பெரிய ஒலியுடையதாய் இருக்கும். அவ்வொலியைக் கேட்கும் போது இரத்த நாளங்களில் புதிய ஓட்டம் ஏற்படும். கலித்தொகையில்,

இடி உறழ் இசையின் இயம் எழுந்து ஆர்ப்ப **கலி.** 104:54

துணிவினால் ஏறுதழுவலில் வலிமையுடைய இளைஞர் ஈடுபடுவர். அதனால் வரும் புகழை விரும்பிக் களம்புகுந்துத் தோள் வலிமையினால் பற்றிப் படித்து நெகிழக் கைகள் தள்ளப்பட உடல் தளர்ந்து அதனைப் பிடிக்க இயலாமல் அதன் முன்பு விழ்ந்தான். வீரனை வேகப்படுத்த இசைக் கருவிகளை ஒலித்தனர்.

கார் எதிர் கலிஒலி இடி உருமின் இயம் கறங்க **கலி.** 105:24

பாய்ந்து வந்த காளைகளின் கொம்பைப் பிடித்தும் மார்பு சேரத் தழுவியும் கழுத்தில் அடக்கியும் கொம்பு தம்மேல் படுவதை ஏற்றுக் கொண்டும் போடிட்ட இளைஞரைக் காளைகள் முட்டிக் கீழே தள்ளியது. விடாமல் சென்றுத் தழுவியவரைக் குத்திக் கொன்றது. அதன்பின்பு நெருங்குவோர் இல்லை. இடி முழக்கம் போன்ற இசைக்கருவிகளின் முழக்கத்தோடு ஏறுதழுவுதல் இனிதே நடைபெற்றுள்ளது.

வெறியாட்டு நிகழ்த்தும்போது ஏற்படும் இசை

குறிஞ்சித் திணை மக்களுக்குரிய வெறியாட்டு. இவ்வெறியாட்டுக் குறிஞ்சி நில மக்களின் வழிபாட்டு நிகழ்வாகத் திகழ்கிறது. முருகனை வேண்டி வெறியாட்டு நிகழ்தல் என்பது மிக இயல்பாக நிகழ்ந்துள்ளது.

வெறியாடும் கட்டுவிச்சியும் வேலனும் வேம்பினது பசிய இலையுடன் நிலப் பூக்களைச் சூடிக் கொண்டனர். பகைவரை வென்ற கடல் போன்றப் படைகளையும் திருந்திய இலையை உடைய நீண்ட வேலையும் கொண்ட பாண்டிய மன்னனின் மலையில் உச்சியினின்று இழியும் ஆரவாரம் செய்யும் அருவியைப் போல் இனிய வாத்தியங்கள் ஒலிக்கக் கையால் வணங்கி அச்சம் தோன்றும் மனையில் முருகனை வருவித்துள்ளனர்.

அருஞ்சிமை இழிதரும் ஆர்த்து வரல் அருவியின்
ததும்பு சீர் இன்இயம் கறங்க கை தொழுது **அகம்.** 138:8-9

என்னும் பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

வெறியாட்டு நிகழ்த்தும் முன் கடம்ப மரத்தின் கொடியை உயர்த்திக் கட்டி மாலைகளைச் சூட்டியுள்ளனர். பல்வேறு ஒலியை உடையத் தாளச் சொற்கட்டுகளுக்கு உட்பட்ட இனிய வாத்தியங்களை இசைத்துக்கொண்டு குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனைப் பாடுகின்றப் பாட்டிற்கேற்ப வெறியாட்டு நிகழ்த்தப்பெறும் களம் சிறப்படையதாகவும் ஆடுவதற்கு ஏற்றவாறு அவர்கள் ஆயுத்தமாகியுள்ளனர். இச்செயல்களைக்,

கடம்பு கொடி யாத்து கண்ணி சூட்டி
வேறு பல் குரல் ஒரு தூக்கு இன்இயம்
காடு கெழு நெடு வேட்பாடு கொளைக்கு ஏற்ப
அணங்கு அயர்வியன் களம் பொலிய பையத்
தூங்குதல் புரிந்தன **அகம்.** 382:3-7

எனும் அகநூனாற்றுப் பாடலடிகள் பறைச்சாற்றுகின்றன.

வெறியாடல் நிகழ்த்துபவர் அச்சத்தை விளைவிக்கக் கூடியவராகவும் குறி கூறுபவராகவும் இருந்தனர். முருகனால் தான் இத்தகையத் துன்பம் விளைந்தது என்றுக் கூறி சொல்லைக் கேட்பவரை வளைத்துக் கொண்டுள்ளனர். பிறருக்கு அச்சத்தை ஏற்படுத்துவதற்காக அரித்தெழும் ஓசையையுடையக் கருவிகளை இயக்கியுள்ளனர்.

அருங் கடிவேலன் முருகொடு வளைஇ
அரிக் கூடு இன் இயம் கறங்க நேர் நிறுத்து **மதுரை.கா.** 611-612

என்று மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கின்றது. வெறியாட்டு நிகழ்த்துவதற்கு முன் அச்சத்தை ஏற்படுத்தும் வண்ணம் இசைக்கருவிகளை இசைப்பதோடு சிவந்த நிறமுடைய மலர்களைத் தூவி வழிபட்டுள்ளனர்.

இமிழ் இசை அருவியோடு இன்இயம் கறங்க **திருமுருகு.** 240

வேலன் கொம்பை ஊதுபவனாகக் குழலை இசைப்பவனாகச் சிறு இசைக்கருவிகள் பலவற்றை இசைப்பவனாகக் காட்டப்பட்டுள்ளான். முருகனின் பல்லியம் ஒலிக்கப் பாடுபவன் என்று வெறியாட்டிற்குரியத் தெய்வமாக முருகன் வருணிக்கப்படுகிறான். இச்செய்தியினை,

குழலன் கோட்டான் குறும் பல்லியத்தன் **திருமுருகு.** 209

என்றாடிச் சுட்டுகின்றது.

பொதுவாக வெறியாட்டு நிகழ்த்தும் பொழுதெல்லாம் வன்மை ஒலியுடைய இசைக்கருவிகளை இசைத்தல் என்பது சங்ககாலத்தில் மரபாகவே திகழ்ந்துள்ளது என்பதை இத்தகையச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

மன்னனின் வளமை

மன்னன் சிறந்த வள்ளல் தன்மை உடையவன். அவ்வள்ளல் தன்மைக்கேற்ப பல வளங்களைக் கொண்ட நாட்டை உடையவன். அவன் நாட்டிலே ஓயாது மழை பெய்துக்

கொண்டிருப்பதால் நாடு செழிப்புற்று இருந்துள்ளது. இறைவனை, வணங்குதலை மட்டும் செய்து விட்டு உன் இசைக்கருவிகளைத் தயவுசெய்து இசைக்க வேண்டாம். ஏனென்றால் அங்கே இசைக்கருவிகளின் ஒலி போல ஓயாது மழை பெய்து கொண்டிருக்கின்றது என்று மன்னனின் வளமையைச் சுவைப்படக் காட்டுகின்றது மலைபடுகடாம்,

> **தொழா நின் சுழியின் அல்லது வறிது**
> **நும் இயம் தொடுதல் ஓம்புமின் மயங்கு துளி**
> **மாரி தலையும் அவன் மல்லல் வெற்பே** **மலைபடு.** 231-233

என்று கூறுகின்றது.

முடிவுரை

சங்க இலக்கியத்தில் இயற்கையில் எழுகின்ற ஒலிகள் பல்லியமாக உவமிக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியக் காலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள். அவர்கள் இயற்கையில் எழுகின்ற ஓசையை இசைக்கருவிகளோடு ஒப்பிட்டுக் கண்டுள்ளனர்.

இன்றையக் காலகட்டத்திலும் கூட இயற்கையில் நிகழ்கின்ற ஓசைகள் இசைக்கருவிகள் போல் ஒசை எழுகின்றது. மழை வரும்போது வருகின்ற இடி ஓசை, பறை ஓசை போல் கேட்கின்றது. வானத்தில் இருந்து வருகின்ற மழைத் துளிகள் மண்ணை வந்து அடையும்போது ஏற்படுகின்ற ஒசையானது பல இசைக்கருவிகள் கூடி எழுப்புகின்ற இன்னிசையைப் போல் ஒசை எழுப்புகின்றது. மலை உச்சியில் இருந்து விழுகின்ற அருவியின் ஓசையானது முரசு போலும் பறை ஓசை போலும் டிரம்ஸ் போலும் ஓசை எழுகின்றது. வண்டுகளின் ரிங்கார ஓசை புல்லாங்குழலின் ஓசை போல் கேட்கின்றது. காற்றில் எழுகின்ற ஓசையும் கடலில் எழுகின்ற அலையின் ஓசையும் சங்கின் ஓசைபோல் எழுகிறது. பூக்களில் உள்ள தேனை உண்ணவரும் வண்டுகளின் ரீங்கார ஓசையானதுக் கிட்டாரின் ஓசை போல் எழுகின்றது.

துணைநூற்பட்டியல்

1. வ த, இராமசுப்பிரமணியம். *புறநானூறு*. சென்னை, திருமகள் நிலையம், 2000.
2. இ ரா, செயபால். *அகநானூறு*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
3. கு வே, பாலசுப்பிரமணியன். *நற்றிணை*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
4. வெ, மணிசேகர். *எளிய உரையில் பத்துப்பாட்டு*. வேலூர், மகாலட்சுமி பதிப்பகம், 2001.
5. அ, விசுவநாதன். *கலித்தொகை*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.

REFERENCES

1. V T, Ramasubramaniyan. *Purananooru*. Chennai, Thirumagal Nilayam, 2000.
2. R, Jayabal. *Agananooru*. Chennai, New Century Book House, 2004.
3. K V, Balasubramaniyan. *Nattrinai*. Chennai, New Century Book House, 2004.
4. V, Manivel. *Eliya Uraiyil Pathupattu*. Vellor, Mahalakshmi Publications, 2001.
5. A, Vishwanathan. *Kaliththogai*. Chennai, New Century Book House, 2004.